
# வியத்தலும் இலமே




திரு. உதயசூரியன்

மேகலா நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தலும் இலமே

சான்றோர் சிந்தனை

தொகுப்பு

தி. உதயசூரியன்

வெளியீடு

கல்வி மற்றும் அறிவராய்ச்சியியல் செயலாடல்களுக்கான

**மேகலா நிலையம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

தலைப்பு :- வியத்தலும் இலமே

உபதலைப்பு :-சான்றோர் சிந்தனை

தொகுப்பு :- தி. உதயசூரியன்

முதற்பதிப்பு :- திருவள்ளுவராண்டு 2041. ஆனி

வெளியீடு :- மேகலா நிலையம்.

அச்சுப்பதிப்பு :- பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், நல்லூர்.

## Bibiliographical data

Tittle : Viyathalum ilame.
(We are) amazed not by the Great

Sub tittle : Anthology of noble thoughts

I.S.B.N : 978-955-98302-4-5

Edited by : T.Uthayasooriyan (B.A Dip.in.Edu)

First Edition : July 2010

Published by : Megala Nilaiyam.

Printed by : Pillaiyar Offset Printers, Nallur.

Price : *Rs.80.00*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கு

எட்டினொடு
இரண்டறியா
என்னைப்
பட்டி மண்டபம்
பாங்குற
ஏற்றினை ஏற்றினை
என் தாயே
உன்னொடு
ஆச்சி அப்புவையும்
என் இதயத்தில்
ஏற்றி ஏற்றி
பிரியாது வணங்குவன்
எப்பொழுதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மகிழ்ச்சியாய் வாழ்தலின் இரகசியம் என்ன?
மன நிம்மதி எங்கே கிடைக்கும்?
ஆறுதல் எங்கே?
ஆனந்தம் எங்கே?

இவ்வாறான கேள்விகள் மக்கள் மனங்களில் நாள் தோறும் நாள் தோறும் எழுந்த வண்ணமே உள்ளன. அன்றாட வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் அழகும் இல்லாமற் போவதற்குக் காரணங் கள் பல உள.

நவநாகரிக மோகம் உயர்ந்த பண்பாட்டு விழுமியங்கள் பலவற்றைத் தொலைத்துவிட்டது. கையிலே இருப்பதைத் தூர வீசி எறிந்துவிட்டு ஆகாயத்தில் பறப்பதைத் தேடி வலை விரித்த கதை மாதிரி மக்கள் அமைதி தேடி, ஆறுதல் தேடி, ஆனந்தம் தேடி அலைந்த வண்ணம் உள்ளனர்.

எழுபது வயதைக் கடந்து விட்ட நிலையிலும் குன்றா இளமையுடனும் மகிழ்வுடனும் வாழ்தலின் இரகசியம் என்ன? என்று கேட்டபோது,

> "யாண்டு பலவாக நரையில ஆகுதல்
> யாங்கு ஆகியர்?" என வினவுதிர் ஆயின்.
> ..........................................................................
> ..........................................................................
> ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"

என்று மறுமொழி சொல்கின்றார் பிசிராந்தையார் என்ற புறநானூற்றுப் புலவர் (புறம் 191).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் தனக்காகப் பழுப்பதில்லை. ஆறு தனக்காகப் பாய்வ தில்லை. அவை போலவே சான்றோரும் உலக நன்மையை விரும்புவர். சான்றோர் பலர் வாழும் நாட்டில் மகிழ்ச்சி பொங்கும், சாந்தி தவழும், சந்தோஷம் பெருக்கெடுத்தோடும்.

சால்புடைய சான்றாண்மை மிக்க சான்றோர்கள் நம் சமுதாயத்தில் பெருக வேண்டும். நமது துன்ப துயரங்கள் மறைய வேண்டும். என்ற நல்ல நோக்கத்தில் வெளிவரும் 'வியத்தலும் இலமே' என்ற இந்த நூல் காலம் அறிந்து வெளிவரும் ஒரு சிறந்த நூலாகும்.

இந்நூலைத் தொகுத்து வெளியிடும் தி. உதயசூரியன் இரண்டு தசாப்த கால ஆசிரியத்துவ அனுபவம் வாய்ந்தவர். தற்பொழுது வடமாகாண கல்வி அமைச்சின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவில் பணி புரிகின்றார். நமது வருங்காலச் சந்ததியினராகிய மாணவச் செல்வங்கள் தத்தம் பாடசாலைகளில் காலை ஒன்று கூடல் பிரார்த்தனையின் போது வாசித்து நல் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ளும் விதமாக இந்நூலைத் தயாரித்துள்ளார்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் சிறந்ததொரு நூலைத் தொகுத்து வெளியிடும் உதயசூரியனுக்கு எனது அன்பும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

வாழ்க பல்லாண்டு

**வடக்கு மாகாண கல்வி அமைச்சு,**
**வரோதய நகர்,**
**திருகோணமலை.**
**17.05.2010**

இ.இளங்கோவன்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புரை

ஆசிரியர் தி. உதயசூரியன் அவர்களை நன்கு அறிவேன். அவருடைய தமிழ்த்தொண்டுகளையும் ஆத்மீகப் பணிகளையும் பராட்டுகின்றேன்.

அண்மையில் வெளியிட இருக்கும் 'வியத்தலும் இலமே' என்னும் சான்றோர் சிந்தனை நூலைப் படித்தேன். விபுலாநந்த அடிகள் மகாத்மாகாந்தி, ஸ்ரீ இராமகிருஷ்ணர், பகவான் அரவிந்தர், சுவாமி விவேகானந்தர், வினோபா போன்ற மகான்களின் அருளுரைகள், அறிவுரைகள் நிறைய உள்ளன.

கலாநிதி மில்க்வைற் கனகராசா ஐயா அவர்கள் சமய, சமூகத்தொண்டுகள் நிறையச் செய்துள்ளார். 'வாசிப்பதால் மனிதன் பூரணம்அடைகிறான்' என்று ஆயிரக்கணக்கில் அச்சடித்து பல நூல்களையும் இலவசமாக வெளியிட்டுள்ளார்.

புத்தகங்களை வாங்கி வாசித்து அறிவைப் பெருக்கும் பழக்கம் தற்காலத்தில் குறைந்து வருகின்றது. உத்தியோகம் பார்த்து பணம் சம்பதிக்கும் நோக்கதோடு மட்டுமே பலர் கல்வி கற்கின்றார்கள். மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைதலேயாகும் என்று தமிழையும் சைவத்தையும் காத்த ஆறுமுகநாவலர் பெருமான் அருளியுள்ளார்.

தமிழ் அறிவும் ஆத்மீக அறிவும் கல்வியில் சேர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் இருக்கவேண்டும். அதில் சான்றோர் சிந்தனையும் இருக்க வேண்டும் ஆசிரியர் அவர்களின் கல்வித்தொண்டு மேலும் விருத்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**முத்துக்குமாரசாமி கோயிலடி,**
**திருகோணமலை.**
**02.05.2010.**

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

அறிவுசார் செயலாடல்களைக் கூர்மைப்படுத்த வேண்டிய அத்தியவசியம் மிக அரிதாகவேனும் உணரப்பட்டுள்ள நமது சம காலத்தில் நம்மலான பங்கினை நம் சமூகத்திற்கு வழங்கும் நோக்கில் மேகலா நிலையம் தொழிற்பட்டு வருகின்றது.

உலகை வர்த்தகமயமாக்கல்
தகவல் ஏகாதிபத்தியம்
நுகர்வோர் கலாசாரப் பரம்பல்
மெகா விளம்பரங்கள்
வர்த்தக நோக்கங்கொண்ட தென்னிந்திய சினிமா
மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள்
களியாட்ட விழாக்கள்

போன்ற இன்னோரன்ன புறக் காரணிகள் மனித மனங்களை அதனதன் இருப்பு நிலைகளிலிருந்து எங்கெங்கோ கடத்திச் சென்று கொண்டிருக்கின்றன. இத்தகையதொரு சமூக அசைவியக்க நிலைமை யில் அறிக்கைத் தொழிற்பாடு என்பதும் பண்பாடு, ஒழுக்கம், விழுமியம் என்பனவும் கேள்விக்குரியதொன்றாக மாறி வருவதை அவதானிக்க முடிகிறது.

உலகை வர்த்தகமயமாக்கும் முகவர்கள் மனிதர்களிடையே எல்லைகடந்த பேராசையைத் தூண்டி விட்டுள்ளதால் அவர்கள் மீளவே முடியாத தாழ்வுச் சிக்கலுக்கும் பண நோய்க்கும் ஆளாகிக் கொண்டிருக்கின்றனர்.

பணமிருந்தால் எதையும் செய்யலாம்
பணத்திற்காக எதையும் செய்யலாம்

என்ற சிந்தனை மக்கள் மனங்களில் விழுதெறியத் தொடங்கிவிட்டது. வளங்கள் யாவும் வீண் விரயம் செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு பாய்வது மன்.

என்ற திருவள்ளுவர் எச்சரிப்பது உலக நன்மையை விரும்பியதே ஆகும். வியத்தலும் இலமே என்ற பெயரில் சான்றோர் சிந்தனைகள் சிலவற்றைத் தொகுத்து நாம் வெளியிடுவது அத்தகைய நன்மையை விரும்பியே.

இந்த நூலில் உள்ளடங்கியுள்ள விடயங்களில் பெரும்பாலானவை வீரகேசரி பத்திரிகையில் வெளியானவை. வீட்டு வேலை, தேடிக்கற்றல் ஆகிய செயற்பாடுகளுக்காக தமது மாணவர்கள் இவற்றைச் சேகரித்து ஒட்டுப்புத்தகமாகத் தயாரித்து பாடசாலையில் காலை ஒன்று கூடல் நிகழ்வின்போது ஏனைய மாணவர்களுக்கு நற்சிந்தனையாக வாசித்து வழங்கினார்கள்.

அந்த ஒட்டுப்புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுத்த இருபது உருப்படிகள் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் புறநானூற்றுப் பாடல் ஒன்று, சுவாமி விபுலானந்த அடிகளது "மனம்போல் வாழ்வு", இ. இரத்தினம் அவர்கள் எழுதிய "சத்திய விஞ்ஞானம்" ஆபிரகாம் லிங்கனது கடிதம், The Gettysburg Address என்பவற்றுடன் தத்துவ ஞானி விமலா தக்கர் நண்பர் வட்டம் பற்றிய செய்திக்குறிப்பு நூலின் பிண்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

காந்தி ஐயா என்று நாங்கள் எல்லோரும் அன்பாக அழைக்கும் நமது மரியாதைக்குரிய சான்றோன் பொ.கந்தையா அவர்கள் இந்நூலுக்கு அன்புரை வழங்கியுள்ளார்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

காந்தி ஐயா அவர்களுக்கும், செயலாளர் அவர்களுக்கும் இந்த நூல் வெளிவர பல வழிகளிலும் உதவிய அன்பர்களுக்கும், எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**ஊரெழு**
**05.07.2010**

தி.உதயசூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Resumé

The title "Not Amazed by the Great" is taken from the penultimate line of Puram, 192.

The cover is adorned by the picture of Abraham Lincoln, a noble humanist, the 16th President of U.S.A. The letter to his son's headmaster, considered one of the world – famous historical documents, is included in this selection. Also, his popular oreation, 'Gettysburg Address" of 1883.

Most of the literary pieces were culled from newspapers. They were placed before the students. They did a marvelous job, in arranging them, They read them and prepared a scrap book. This was read in the morning assemblies and welcome by students and teachers a like. It is now presented to a wider public, in book form.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

- சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார்.

யாதும் ஊரே: யாவரும் கேளிர்:
தீதும் நன்றும் பிறர்தர வாரா:
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன:
சாதலும் புதுவது அன்றே: வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே: முனிவின்,
இன்னாது என்றலும் இலமே: மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்

காட்சியின் தெளிந்தனம், ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே:
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்போல் வாழ்வு

- விபுலானந்த அடிகள்



ஒவ்வொரு பாஷையிலும் மேலான உண்மைகளை விளக்கும் முதுமொழிகள் பல வழங்கப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றன.

இவை வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ் வொன்று முதன்மை பெற்று முதுமொழிகளாயிருப்பதோடு புதுப் பொருளுந் தந்து வழிகாட்டுகின்றன.

மனம்போல் வாழ்வு என்னுந் தொடர் இம்முதுமொழிகளி னொன்றாய் நின்று உண்மைகள் பலவற்றை விளக்குகின்றது.

(பொருளுக்கேற்ப இலக்கண முடிபு அமைத்துக்கொண்டு) இது விளக்கும் உண்மைகளைக் கீழே காண்போம்.

1. ஒருவன் மனம் நன்றகவோ தீதாகவோ இருப்பதைப் பொறுத்து தான் அவன் வாழ்வு சந்தோஷமாகவோ துக்கமாகவோ இருக்கும்.

2. ஒருவன் தன் மனச்சாட்சி வழியேதான் ஒழுக வேண்டும்.

3. ஒருவனது வேட்கையின் போக்கு (நோக்கம்) அவன் (எதிர்கால) வாழ்க்கையை ஆக்குகிறது.

4. ஒருவன் மனம் விடயங்களைக் கருதும் வகையாலேயே அவன் வாழ்வு இன்பமாகவோ துன்பமாகவோ புலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. செயல்கள் மனத்தோடு பொருந்தாதா வழி, செய்தவனைப் பாதிப்பதில்லை மனமோ, செயலோடு பொருந்தாத வழியும் தன்னையுடையானைப் பாதித்தல் நிச்சயம்.

6. உள்ளம் ஆரோக்கியமாயிருந்தால் மட்டுமே உடல்நிலை ஆரோக் கியமாயிருக்க முடியும்.

7. மனநலமுடையாரது வாழ்வு நீடிக்கும்.

8. பற்றிலிருந்து விடுபட்ட மனந்தான் உண்மை வாழ்வாகிய வீட்டு நிலையை ஒருவனுக்கு உதவுகிறது.

9. மனம் எப்பொருளை இடைவிடாது சிந்திக்கிறதோ அப்பொரு ளைப் போலாகிறது வாழ்வு

10. தன் மனத்தின் பிரதிவிம்பத்தையே ஒருவன் வெளியே கண்கின்றான்.

11. ஒருவன் மனநிலையிலிருந்து அவன் வாழ்க்கை வேறுபட்டிருக்க முடியாது.

12. ஒத்த மனநிலையுடையாரது வாழ்க்கையும் ஒன்றாகவேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிஜமான தர்மம் எது?

- புத்தபகவான்

இவ்வுலகில் பிறந்தவன் முதலில் போற்ற வேண்டியது பெற்றதாயை ஆகும். அடுத்து தந்தை இதையடுத்து துறவிகளையும், மெய்ஞானிகளையும் போற்ற வேண்டும்.

நல்லொழுக்கம் மிகமிக அவசியம். நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். தர்மச் செயல்களை செய்ய வேண்டும். தர்மத்தால் நன்மை நடக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இந்த உலகம் எப்படிப்பட்டது என்ற ஞானத்தைப் பெறவேண்டும்.

பாவங்களை அறவே செய்யக் கூடாது.

தர்மம் என்றால் என்ன என்பதை சிந்தித்துப்பாருங்கள். வெறும் பொருட்களை வழங்குவதால் மட்டும் ஒருவன் தர்மசீலன் ஆகிவிடமாட்டான்.

சத்தியமே எல்லா தானத்திலும் சிறந்தது. நீங்கள் சத்தியத்தைக் கடைப்பிடித்தால் உங்களைப் பார்த்து ஆயிரம் பேர் அதையே கடைப்பிடிக்க கூடும். இதுவே தானங்களில் மிகச் சிறந்த தானம்

இந்த உடலைப் பற்றி பெரிதாக எண்ணுவதற்கு எதுவுமே இல்லை. எலும்புகளால் கட்டப்பட்டுள்ள இந்த உடல் என்ற கோட்டையின்மீது ரத்தமும் தசையும் பூசப்பட்டுள்ளன. நரை, சாவு, அகந்தை, பயம், ஆணவம் ஆகியவை இதற்குள் ஒளிந்து கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்திய விஞ்ஞானம்

- இ.இரத்தினம்

எத்தனையோ விஞ்ஞானிகள் எத்தனையோ வகையான பரிசோதனைகளை நடாத்தியிருக்கின்றார்கள். எல்லோரும் சடப் பொருள்களின் தோற்றம், இயக்கம் ஆகியவற்றைக் கண்டு பிடிப்பதிலேயே தம் காலத்தைச் செலவளித்தார்கள். அங்கு தாம் கண்ட உண்மைகளை மனித குலத்திற்குப் பயன்பட வைத்தார்கள். ஆயின் சடம், மனிதன், ஒழுக்கம், உலகு, என்று சொல்லப்படுகின்ற எல்லாவற்றையும் அவற்றின் இயல்புகள் புலப்பட ஒருங்குவைத்துப் பரிசோதனை செய்து உண்மை பெற முயன்றுவரும் நோற்றவரும் மகாத்மா காந்தி அடிகளே ஆவர்.

மகாத்மா காந்தி அடிகள் உண்மையே, சத்தியமே இறைவன் என்பார்கள். சத்தியத்தை, இறைவனை நேருக்கு நேர் தரிசிக்க வேண்டுமென்றால், தியானமோ, சிந்தனையோ போதாது கருமமே கண்ணாகக் கொள்ள வேண்டும் கடவுள் உடம்பெடுத்து நம்முன் வருவதில்லை, கடவுள் யாதாயினும் ஒரு வடிவில் நமக்குக் காட்சி அளிப்பார் கடவுள் செயல் வடிவிலேயே நமக்குக் காட்சி அளிப்பார் என்பதே மகாத்மா நமக்கு கற்பித்த பெரும் பாடம்.

அவரின் சத்திய சோதனையின் அடக்கப் பொருள் இதே. இத்தத்துவத்தை நாம் ஆராய்வதால் நாம் இன்னும் பல உண்மைகளை அறியலாம். கடவுளை அறிய வேண்டுமெனில் பணிசெய்து தான் அறியவேண்டுமென்பது சத்திய சோதனையின் அடக்கப் பொருள். இந்த உண்மையை மனிதவாழ்க்கையெனும் ஆய்வுகூடத்தில் நடாத்திய சத்திய விஞ்ஞானப் பரிசோதனைகள் மூலம் அவர் நமக்கு அறிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனப்படகின் பாயை விரி

**- ராமகிருஷ்ண பரமஹஸர்**

பல ஆண்டுகளாகப் பூட்டிகிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால் அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப் பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டு தான் இருக்கிறது.

வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

இறைவனின் திருப்புகழைப் பாடும்போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக்கொண்டும் பாடுவாயாக, அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும். சேற்றில் புரள்வது தான் குழந்தையின் இயல்பு, ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள் செய்கிறார்.

நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு.

நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப் பாதையில் கொண்டு சென்று விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வம் எங்கே இருப்பது?

- பாரதி

கோயிலுக்குப் போனாலும் சரி போகாவிட்டாலும் சரி! தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி: வணங்காவிட்டாலும் சரி: பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தான் தெய்வம் அருள் புரியும்.

இருதயத்தில் சுத்தமான பயமற்ற, கபடமற்ற குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங்களை நிறுத்திக் கொண்டால் உடம்பில் தெய்வத்தன்மை விளங்கும்.

வஞ்சனையில்லாமல் உலகத்தில் பிறந்தோம். தெய்வம் விட்டதே வழி என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டை போல் உலக வெள்ளத்தில் மிதந்து செல்லவேண்டும். அங்ஙனம் முற்றிலும் பாராதீனனாய், எவன் ஒருவன் ஈஸ்வரன் மீது சகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானோ, அவனுக்குத் தெய்வத் தன்மை உண்டாகும்.


தெய்வமே நீதான். இதில் சந்தேகமே கிடையாது எதிர் பார்க்க முடியாத பயன், உலகத்தார் கண்டு வியக்கும் வண்ண மாக ஒருவனுக்குக் கைகூட வேண்டுமானால் அதற்கு தெய்வ பக்தியே உபாயம்.

தெய்வபக்தி உண்மையானால் தர்மசிந்தனை அங்கு இருக்கும். தர்மசிந்தனை இல்லாத இடத்தில், தெய்வ பக்தி வேஷமே தவிர வேறொன்றுமில்லை.

பொது விஷயங்களிலும், நாட்டின் சேவையிலும் ஈடுபடுவோருக்குத் தெய்வ பக்தி வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உனக்கு நீதான் நீதிபதி

**-மகாத்மாகாந்தி**

எனக்கு கோபம் ஏற்படாமல் இல்லை, ஆனால், கோபத்தை அடக்கிக் கொள்கிறேன். இடைவிடாமல் முயன்றால் எல்லோருக்கும் இது சாத்தியமாகும்.

என்னுடைய கண்களை நீங்கள் பிடுங்கி விடலாம். அதனால் என்னுடைய உயிர் போகாது. என்னுடைய மூக்கை அறுத்து விடலாம். அதனாலும் நான் இறந்துவிடமாட்டேன். ஆனால் நான் கொண்டுள்ள கடவுள் நம்பிக்கையை தகர்த்து விட்டால் அந்த நிமிடமே நான் செத்தவன் ஆவேன்.

எனது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அதில் இரகசியங்கள் கிடையாது. அவற்றை நான் மறைக்க விரும்பவில்லை.

உனக்கு நீயே நீதிபதியாக இரு தவறு செய்த தருணத்தில் நீதிக்கு புறம்பாக தப்பிக்க முயற்சி செய்யாதே. அதற்கான பிராயச்சித்தம் தேடிக்கொள். அப்போது தான் உண்மையிலேயே நீ மகிழ்ச்சியாக இருப்பாய்.

எத்தனை குழப்பம் நேர்ந்தாலும் எப்போதும் உண்மையை மறைக்காமல் கூறுகின்ற மனத்துணிவு வேண்டும். பொய்மை என்றுமே நிலைத்ததில்லை. வாய்மையே வெல்லும்.

இறைவனிடம் போதிய நம்பிக்கை இல்லாததால் வழிபாடு போன்றவற்றில் அவநம்பிக்கை கொண்டிருந்தேன். இதனால் வாழ்வில் எந்த பிடிப்பும் இல்லாமல் இருந்தேன். பிறகு உடலுக்கு உணவு அவசியமானது போல உயிருக்கு கடவுள் வழிபாடு அவசியமானது என்பதை உணர்ந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவையின்றிப் பேசாதீர்கள்

**- புத்தபகவான்**

நன்றி மட்டுமே உங்களுக்கு நெருங்கிய உறவாகும். ஆகவே நன்றியுடன் இருங்கள். உங்களுக்குத் தீமை செய்தவருக்கும் நன்மையே செய்யுங்கள். அதற்கு மனதில் நற்சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு பகைவனால் உண்டாகும் தீமையை விட, அடக்கமும் நற்சிந்தனையும் இல்லாத மனதால் வரும் தீமையே அதிகமாக இருக்கிறது. ஆகவே முதலில் மனதைத் திருத்திக்கொள்ள வேண்டும். மனம்தான் இன்ப, துன்பங்களுக்கான ஆரம்ப புள்ளியாக இருக்கிறது.

ஒருவர் தான் சேர்த்து வைத்திருக்கும் பொருட்செல்வத்தை இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுவதால் மட்டும் பாக்கியம் பெற்று விடுவதில்லை. தன் பெற்றோரை நன்கு கவனித்து அவர்களுக்கு மனதார சேவை செய்தால் மட்டுமே பாக்கியம் பெற்றவராவார் பெற்றவர்களுக்குக் கொடுக்கமால் மற்றவர்களுக்கு கொடுப்பதால் பயனேதும் உண்டாகாது.

பேசும் வார்த்தைகள் அர்த்தமுள்ளதாக பிறருக்கு நன்மை தருவதாக இருக்கவேண்டும். ஒரு பொருளும் இல்லாமல், பயனில்லாத வீண் பேச்சுக்கள் பேசுவதைக் காட்டிலும் மனதுக்கு அமைதி தரும் அர்த்தமுள்ள ஒரு வார்த்தை பேசுவதே மேலானது. வீண் பேச்சினால் உங்களுக்கும் அதைக் கேட்பவர்களுக்கும் நேரம் வீணாகுமே தவிர வேறு நன்மை ஏதும் உண்டாவதில்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதைக் கற்கவேண்டும்?
# எதைக் கற்பிக்கவேண்டும்?

**ஆபிரகாம் லிங்கன் தன்னுடைய மகனின் பாடசாலைதலைமை ஆசிரியருக்கு எழுதிய கடிதம்**

அனைத்து மக்களும் நீதி, உண்மை சார்ந்தவர்கள் அல்ல என்று கற்கவேண்டும். ஆனால் பயந்த சுபாவமுள்ள அனைவருக்குள்ளும் வீரன் ஒருவன் உள்ளான் என்று கற்றுக்கொடுங்கள். அனைத்து சுயநலவாதி அரசியல்வாதிக் குள்ளும் தலைமைத்துவம் மிக்க தலைவர் உள்ளார் என்றும் ஒவ்வொரு எதிரிக்குள்ளம் தோழமை உணர்வு உள்ளதென்றும் கற்பியுங்கள்.

இதற்காக நீண்ட காலம் எடுக்கலாம். ஆயினும் உழைப் பின்றிக் கிடைக்கும் ஐந்து டொலர்களை விட, தம் உழைப்பின் வியர்வையில் கிடைக்கும் ஒரு டொலர் பெறுமதியானது எனவும் புகட்டுங்கள். வெற்றி மகிழ்ச்சி மிகுந்தது என்பதைக் கூறுவதோடு, தோல்வியை எவ்வாறு அனுபவிப்பது என்றும் கற்றுக்கொடுங்கள். பொறாமையினின்று அவனை விடுவியுங்கள்.

முடிந்தால் அமைதியாகச் சிரிப்பது எவ்வாறு என்று சொல்லிக்கொடுங்கள். புத்தகங்களின் பெறுமதி எத்தகையது என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். இவை எல்லாம் போதிக் கும் அதே நேரம், ஆகாயத்தில் பறந்து திரியும் குருவிகள், சூரிய ஒளியில் தேனைத் தேடும் வண்டுகள், மலைகளில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஆகியவற்றின் நீண்ட கால நிலை யான உண்மையின் இரகசியத்தை சிந்திக்கக் கற்றுக்கொடுங்கள்.

குறுக்கு வழியிலும் பார்க்கப் பரீட்சையில் தோல்வி அடைவது சிறந்தது என்றும் கற்றுக்கொடுங்கள். எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை என்று கூறினாலும், தமது கருத்தில், சிந்தனையில் நம்பிக்கை வைக்கும்படி தூண்டுங்கள். அன்புள்ளம் கொண்டவர்களோடு அன் போடும், கடின உள்ளம் கொண்டோரிடத்தில் கடினமாகவும் நடந்தகொள்வது எவ்வாறு என்றும் அவன் கற்றுக்கொள்ளவேண்டும்.

அனைவரும் செய்வதைப் போன்று செய்யாமல், அனைவருக் கும் செவிமடுப்பது எவ்வாறு என்றும் மகனுக்குச் சொல்லிக்கொடுங் கள். ஆனாலும் தான் கேட்பவற்றில் உண்மையானதை மட்டும் ஏற்றுக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள். அவ்வாறே துன்பம் ஏற்படும் போது சிரிப்பது எவ்வாறு என்று கற்பியுங்கள். அழுவது கண்ணீர் விடுவது வெட்கத்திற்குரிய ஒன்றல்ல என்றும் புகட்டுங்கள்.

எச்சந்தர்ப்பத்திலும் பணத்திற்காக உள்ளத்தையும், ஆன்மாவையும் விற்கவேண்டாம் என கட்டாயமாக சொல்லிக் கொடுங்கள். பாய்ந்து வரும் மக்கள் கூட்டத்தைக் கண்டு பயந்து விடாமல், நேருக்கு நேர் நின்று சண்டை பிடிப்பது எவ்வாறு என்று சொல்லிக்கொடுங்கள்.

அவனைக் கருணையோடும் அன்போடும் கவனித்துக் கொள்ளுங்கள் ஆனாலும் செல்லப்பிள்ளையாக்கதீர்கள். ஏனெ னில் சுடச் சுடத்தான் பொன் மிளிரும் வாழ்வை எதிர்நோக்க அவனுக்குத் தைரியம் உண்டாகட்டும். கோழையாக இல்லாமல் இருக்க பொறுமையைப் பழக்கப்படுத்திக் கொள்ளுவதையும் உணர்வில் ஊட்டுங்கள்.

தன்னைப் பற்றிப் பாரிய நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்கிறபோது, மனித இனத்தைப் பற்றியும் அவன் நம்பிக்கையை ஏற்படுத்தக்கொள்வான்.

இது பெரியதோர் பொறுப்பாகும். ஆயினும் உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். அவன் இன்னும் சிறிய செல்லப்பிள்ளை யாக இருக்கின்றாரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# THE GETTYSBURG ADDRESS

Fourscore and seven years ago our fathers brought forth on this continent a new nation, conceived in liberty, and dedicated to the proposition that all men are created equal.Now we are engaged in a great civil war, testing whether that nation, or any nation so conceived and so dedicated, can long endure. We are met on a great battle-field of that war. We have come to dedicate a portion of that field as a final resting-place for those who here gave their lives that that nation might live. It is altogether fitting and proper that we should do this.

But, in a larger sense, we cannot dedicate…we cannot consecrate…we cannot hallow…this ground. The brave men, living and dead, who struggled here, have consecrated it far above our poor power to add or detract. The world will little note nor long remember what we say here, but it can never forget what they did here. It is for us, the living, rather, to be dedicated here to the unfinished work which they who fought here have thus far so nobly advanced. It is rather for us to be here dedicated to the great task remaining before us…that from these honored dead we take increased devotion to that cause for which they gave the last full measure of devotion; that we here highly resolve that these dead shall not have died in vain; that this nation, under God, shall have a new birth of freedom; and that government of the people, by the people, for the people, shall not perish from the earth



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளைப்பார்த்து அறிவை எடை போடாதீர்

**- அதி வீரராம பண்டியன்**

அறிஞர்கள் நல்ல நூல்களைக் கற்று அவற்றின் பொருள் களை சந்தேகமின்றி உணர்ந்து ஐம்புலன்களையும் கட்டுக்குள் அடக்கி தன்னிலேயே அடங்கி வாழ்பவர்கள்.

அடக்கம் தான் அறிஞருக்கு உண்மையான அழகாகும்.

வறுமை வந்தபோதும் ஒழுக்கநெறியில் தவறாமல் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு வறுமையிலும் செம்மையாக விளங்கு வது தான் ஏழைகளுக்கு அழகாகும்.

வளர்ச்சியால் உயர்ந்து காணப்படுகிறவர்கள் எல்லாரும் பண்பால் பிறருக்கு உதவும் தன்மையோடு உயர்ந்து இருப்பார் கள் என்று நினைப்பது தவறு.

மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது. சிறியவர்களும் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கக் கூடியவர்களாயிருப்பார் கள். ஆகவே உருவத்தைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது.

வெளித் தோற்றத்துக்குப் பெரியவர்களாகத் தோன்றுகிற வர்கள் அத்தனைபேரும் அறிவிலும் அரிய பண்பிலும் ஆற்றலி லும் பெரியவர்களாக இருந்துவிட மாட்டார்கள். பார்வைக்குச் சிறியவர்கள் போன்ற தோற்றமுடையவர்கள் அத்தனைபேருமே உண்மையில் அறிவிலும் அரிய பண்பிலும் ஆற்றலிலும் இளைய வர்களாக இருந்து விட மாட்டார்கள். ஒருவர் பெறும் அத்தனை பிள்ளைகளும் அறிவுடைய பிள்ளைகளாகவோ, நல்ல ஒழுக்க நெறியில் சிறந்து விளங்குகின்ற பிள்ளைகளாகவோ இருப்பார்கள் என எதிர்பார்க்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய்சொல்லாமல் இருக்க வழி

- அரவிந்தர்

நீ சறுக்கினாலும் நிமிர்ந்து கொள்ள வேண்டும். கீழே விழுந்து விட்டாலும் எழுந்து இறைவனை நோக்கிய பாதையில் தொடர்ந்து செல்ல வேண்டும். இதுவே உன்னுடைய மனப்போக்காக இருக்கவேண்டும். எது நேரினும் இறைவனை சிக்கென உறுதியாக பிடித்துக் கொள்வது நல்லது.

மன உறுதி இல்லாமையாலும் ஒழுக்கமின்மையாலும் தான் பொதுவாக மனிதர்கள் பொய் சொல்லுகின்றனர். மன உறுதியுள்ள வர்களுக்கு பொய் சொல்லும் அவசியம் வராது.

தெய்வத்தின் மீது செலுத்தும் அன்பு, மக்கள் சாதாரணமாக காட்டும் அன்பாக இருக்கக்கூடாது. தூய்மையான, தன்னலம் கருதாத, தெய்வீக அன்பாக இருக்க வேண்டும்.

நீ கடவுளை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால் அவர் ஏற்கனவே உன்னை நோக்கி நூறு அடி எடுத்து வைத்திருப்பதை உணர்வாய்.

கடவுள் நம்மை அடைய எப்போதும் ஆவல் கொண்ட வராய் இருக்கிறார். குழந்தைக்கு நாம் கொடுக்கும் பொருளின் மதிப்பு தெரியாததைப் போல மனிதனுக்கு இறைவனிடமிருந்து பெறுவதன் மதிப்பு தெரிவதில்லை.

எதைக்கொடுத்தாலும் யாருக்குக் கொடுத்தாலும் எல்லா உயிர்களிடத்தும் கோவில் கொண்டுள்ள ஒரே கடவுளுக்கு கொடுக் கிறோம் என்னும் உணர்வுடன் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உன்னைப் பலவீனன் என எண்ணாதே

**- சுவாமி விவேகானந்தர்**

செல்வம் படைத்தவன் செல்வம் இல்லாதவன் மேல் செலுத்தும் ஆதிக்கத்தைத் தவிர்க்க வேண்டும். அறிவுடையவன் அறிவு குறைந்தவன் மேல் செலுத்தும் ஆதிக்கத்தை விட வேண்டும்.

முப்பத்து மூன்று கோடிப் புராண தெய்வங்களிடத்தும் மேலும் அவ்வப்போது நம்மிடையே அந்நிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்ளிடத்தும் நம்பிக்கை இருந்தாலும் கூட ஒருவனிடத்தில் தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவனுக்குக் கதி மோட்சமில்லை.

பாவம் என்ற ஒன்று உண்டென்றால் அது நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வது ஒன்றுதான்.

சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும்தான் காண்பாய்.

வந்த உதவிகள் எல்லாம் உனக்குள் இருந்தவையாகத் தான் இருக்கும்.

நம்பிக்கை! நம்பிக்கை! நம்மிடத்தில் நம்பிக்கை! கடவுளிடத்தில் நம்பிக்கை! இதுவே மகிமை பெறுவதன் ரகசியமாகும்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனதிற்குப் புத்தியே தோழி

- சின்மயானந்தர்

நல்ல எண்ணங்களை வளர்க்கமால் உங்களின் வாழ்க்கை வழிமுறைகளை மாற்றிக் கொள்வதால் எந்த பயனும் இல்லை. அப்படியே செய்தாலும் போலித்தானமாகவே அமையும். நீங்கள் சரியான பாதையில் முன்னேறும் போது தீய வழிமுறைகள் உங்கள் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோற்றுப்போய்விடும். எனவே நீங்கள் உங்களது நோக்கங்களை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அமைதியான ஆனந்தமான வாழ்க்கை வேண்டுமானால் தன்னலமில்லாத நிலை வேண்டும். பக்திபூர்வமான தொண்டு செய்ய வேண்டும். இவை வாழ்க்கையில் மிகுந்த உற்சாகத்தை அளிக்கும். பெரியோர்களின் வாழ்க்கையை பார்த்து அவர்களின் அறிவுரை களைக் கேட்டு, படித்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துபவன் ஆனந்தம் அடைகின்றான்.

சாதாரண மனிதனின் சமூகத்தொண்டு கண்ணுக்குப் பெரிதாகப் படுகிறது. ஆனால் அதன் எல்லை மிகக் குறுகியது. ஞானிகள் உலக நன்மைக்காக செய்யும் பிரார்த்தனையின் வலிமை கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் அதனால் ஏற்படும் பலன்கள் எல்லை கடந்தவை.

தியானம் மனிதனின் மிகப் புனிதமான கடமை, இது தீய எண்ணங்களை நமது பிடிக்குள் கொண்டு வருகிறது. நமது மனதை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகின்றது. மனதை எப்போதும் உன் புத்தியால் ஆட்சி செய் உன் மனத்திற்குப் புத்தியே தோழி. இவற்றின் கூட்டுறவால் மனிதன் முழுவளர்ச்சி அடைகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாந்தமாக இருங்கள்

- ரமணர்

ஒருவன் அயர்ந்து தூங்கும்போது இவ்வுல கம் இருந்தும் அதைப் பற்றிய கவலை இல்லாமல் இருக்கிறான். அவன் மனது ஆறுதலை அடைந்து குளிர்ந்திருக் கிறது. இவ்வாறு ஒருவன் இவ்வுலகத்தைக் காணும்போதும் இவ்வுலக சம்பந்தமான வேலைகளை செய்யும்போதும் அதாவது விழிப்பு நிலையிலும் மனம் கவலையற்று குளிர்ந்திருக்குமானால் அதுவே சாந்தம்

பிறர் சொத்து கொள்ளை போனால் அதில் மனம் அடை கிற சூட்டைவிட நமது சொத்து கொள்ளை போனால் அடைகிற சூடு மிகுதியாகவே இருக்கிறது. நம்முடைய சொந்த பொருளி லேயே குறிப்பிட்ட ஒரு பொருள் தொலைந்தால் நாம் அதிகமாக வருத்தப்படுவதில்லை. ஆனால் நமக்கு பிடித்தனமான ஒரு பொருள் தொலைந்துவிட்டால் அதன் மதிப்பைப் பொறுத்து நாம் கவலை அடைகிறோம். அதனால் எல்லா பொருள்களுக்கும் ஒரே மதிப்பை ஒருவன் தருவானானால் அவனது மனம் எப்போதும் பரமசாந்த நிலையிலேயே இருக்கும்.

ஒருவன் ஒரு கனவு கண்டு விழிக்கிறான். அந்தக் கனவில் விலை உயர்ந்த ஒரு பொருள் வருகிறது. அதைப் பார்த்த மகிழ்ச்சியில் மனம் சந்தோஷமாக இருக்கிறது. கனவிலிருந்து விழித்த பிறகு கனவில் பார்த்த பொருளுக்காக அவன் வருத்தப் படுவதில்லை. ஏனெனில் கனவு என்பது கலையக்கூடியது என்பது அவனுக்குத் தெரியும். கனவு காண்பவன் விழித்துத்தான் தீர வேண்டும். என்பதை நன்றாக அவன் உணர்ந்திருக்கிறான். இந்த உலகமும் ஒரு கனவு என்பதை மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். கனவான இந்த உலகில் ஏற்படும் கஷ்டங்களுக்காக மனதைச் சூடாக்கிக் கொள்ளாமல் சாந்த நிலையில் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாம் இறைவன் செயலே!

-ஔவையார்

நல்லோருக்குச் செய்த உதவி கல்மேல் பொறித்த எழுத்தாக நிலைத்திருக்கும். தீயோருக்குச் செய்த உதவி நீர்மேல் எழுதிய எழுத்தாக சுவடு தெரியமால் அப்போதே அழிந்துவிடும்.

நீருள்ள குளத்தில் இருக்கும் பறவைகள் நீர் வற்றியவுடன் குளத்தைவிட்டு நீங்கி வேறு இடம் சென்று விடும். அதுபோல செல்வ வளத்தில் உடனிருந்த நண்பர்கள் வறுமை வந்ததும் நம்மைவிட்டு அகன்று விடுவார்கள். அல்லி, நெய்தல் மலர்கள் நீர் வற்றிய காலத்திலும் குளத்தை விட்டு நீங்காமல் இருப்பது போல வறுமை வந்தபோதும் உண்மையான உறவினர்கள் நம்மைவிட்டு அகலமாட்டார்கள்.

பொன்னால் செய்த குடம் உடைந்த பின்னும் பொன்னாகவே பயன்படும். அதுபோல சிறந்த பண்புகளுடைய செல்வந்தர் வறுமையில் வாடினாலும் பிறருக்கு நன்மையே செய்வர்.

நினைத்த பொருள் ஒன்றாகவும் கிடைக்கும்பொருள் வேறாகவும் அமைவதும் அவ்வாறு இல்லாமல் நினைத்த பொருளே கிடைப்பதும் நினையாத ஒன்று நாம் எதிர்பாராத நிலையில் கிடைப்பதும் நம் வாழ்வில் நிகழ்கின்றன. இவை எல்லாம் நம்மை ஆளும் இறைவனின் செயலே ஆகும்.

வரவுக்கு மேல் செலவு செய்பவன் தன்மானத்தை இழப்பான். அறிவுகெட்டு அலைவான். செல்லுமிடங்களில் திருடன் என்று பழி தூற்றப்படுவான். நல்லவர்களால் இவன் மிகப் பொல்லாதவன் என்று எண்ணப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்பமும் துன்பமும் சமமே!

-வினோபா

தராசின் ஒரு தட்டில் எடைக்கல்லை வைக்கும்போது அது கீழிறங்கியும், மற்றொரு தட்டு மேலேயும் உயர்கின்றன. அந்த தட்டில் எடைக் கல்லுக்கு ஈடான பொருளை வைத்தால் இரண்டு தட்டுக்களும் சமநிலை பெறுகின்றன. வாழ்க்கையும் தராசு போன்றதுதான். இன்பம் போன்று மாயத் தோற்றமளிக்கும் துன்பத்தை பெறுவதற்காக பல இன்பங்களை இழக்கின்றனர். இதனால் வாழ்க்கை சமநிலையின்றி இன்பமும் துன்பமுமாக மாறிமாறி பயணிக்கின்றது. இன்ப, துன்பங்களை சமமாக எடுத்துக்கொள்ள மனதை இறைவனிடம் செலுத்த வேண்டும்.

சூரியன் எல்லாருக்கும் ஒரே வெளிச்சத்தையும் வெப்பத்தையுமே தருகிறது. யாரிடமும் பாரபட்சம் பார்ப்பதில்லை. அதைப்போலவே நாமும் பாரபட்சம் பார்க்காதவர்களாக இருக்க வேண்டும். இத்தகையவர்களுக்கு உயர்ந்த குணங்கள் தாமாகவே அமைந்துவிடும். அவர்களது செயல்களும், பிறரது நன்மையை முன்னிலைப்படுத்துவதாக இருக்கும் இவர்களே இறைவனுக்கு பிடித்தமானவர்களாக இருக்கின்றனர். இறைவனது அருட்பார்வையும் எளிதில் இவர்களுக்கு கிடைத்து விடுகிறது.

இறைவனின் அருளைப்பெற பாரபட்சம் இல்லாத தன்மை அவசியம்.

உதவி செய்யும் குணத்தினால்தான் மனிதனுக்குள் உண்மையான இன்பம் பிறக்கிறது. கஷ்டப்படும் ஒருவருக்கு நீங்கள் செய்யும் சிறிய உதவி உங்களிடமே பல மடங்காக திரும்பி வந்து சேரும். இந்த உண்மையைப் புரிந்து கொண்டு ஈகைக் குணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்ல எண்ணங்களைப் பெறுவோம்

-வியாசர்

பக்தி ஒளி இருக்கும் மனதில் அறியாமை என்னும் இருள் இருப்பதில்லை. பதவி சாதிக்க முடியாததைக் கூட பக்தியால் சாதிக்க முடியும்.

பிறருடைய குற்றங்குறைகளை மன்னிப்பவன் மனிதன்.

அதே சமயத்தில் பிறர் குறைகளை மறந்துவிடுபவன் தன்னைத் தெய்வநிலைக்கு உயர்த்திக் கொள்கிறான்.

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதே உண்மையான விரதம். பிறருக்குத் தீமை செய்யாத எந்தத் தொழிலும் உயர்வானதாகும்.

பேராசைக் குணம் மக்களின் வாழ்க்கையை திசைதிருப்பத் தொடங்கினால், அதன் பிடியில் சிக்கியவர்கள் தங்கள் வாழ்க்கை யைக அழித்துக்கொள்வார்கள்.

கடவுளுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்ப கட்டம். முதிரும்போது பயம் அன்பாக மாறுகிறது. பூரண அன்பு நம் மனதில் பரிணமிக்கும்போது, பயம் முற்றிலுமாக நம்மை விட்டு நீங்கிவிடுகிறது.

புலன்களின் ஆதிக்கத்தில் அடங்கி நடக்கும் வாழ்க்கை உலக சம்பந்தமானது. புலன்களை நம் ஆதிக்கத்தில் கொண்டு வந்து அடக்கி வாழும் வாழ்க்கை ஆன்மீக சம்பந்தமானது.

நல்ல எண்ணங்கள் நல்ல மனிதனை உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்குப் பாகுபாடு இல்லை

**-தாயுமானவர்**

அன்பு அளப்பரிய சக்தி கொண்டது. அன்பினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

மனதில் அன்பு கொண்டிருப்பவர்கள் எப்போதும் அமைதி யாகவும் செயல்களில் தடுமாற்றம் இல்லாமலும் இருப்பார்கள்.

அன்பு கசப்பாக இருப்பதனைக்கூட இனிப்பாக மாற்றிவிடும் சக்தி கொண்டது. ஆகவே அனைவர்மீதும் பாரபட்சம் இல்லாத அன்பு செலுத்துங்கள்

விண்ணுலகம் மண்ணுலகம் இவ்விரு உலகிலும் அன்புக்கு ஒப்பானது எதுவும் இல்லை. ஏனெனில் அன்பானது இறைவனிடம் இருந்து வந்ததாகும். இறைவன் அனைவருக்கும் பொதுவானவராக இருப்பதைப்போல அன்பும் பொதுவானதாகவே இருக்கிறது. அதற்கு மொழி இனம் போன்ற பாகுபாடுகள் எதுவும் கிடையாது. அத்தகைய அன்பு கொண்டதாக உங்களது மனதை மாற்றிக் கொள்ளுங்கள்.

அன்புடையவர்கள் சுயநலமின்றி தன்னிடம் இருக்கும் அனைத்தையும் அப்படியே வாரிக்கொடுக்கும் பண்புடையவர் களாகவே இருப்பார். தனது பொருள் பிறர் பொருள் என்று இவர்கள் பிரித்துப் பார்ப்பதுமில்லை. அனைத்தும் அனைவருக்கும் சொந்த மானது என்ற எண்ணமே இவர்களிடம் இருக்கும். இவர்கள் இறைவனின் அருள் பெற்றவர்களாகவே இருப்பர்.

உங்களுக்கு இறைவனின் அருள் வேண்டுமென விரும்பினால் முதலில் அன்புடன் வாழக்கற்றுக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்கடமையைச் செய்

**-சத்யசாய் பாபா**



குழந்தைக்குத் தாய் பேசக் கற்றுக்கொடுக்கிறாள். பேச வேண்டியது குழந்தையே. ஆசான் மாணவனுக்குக் கல்வி போதிக்கிறார். கற்று அதன்படி நடக்க வேண்டியது மாணவனின் கடமையே. இறைவனை மனக்கண்ணின் முன் நிறுத்தி அவனோடு ஒன்றி விடுவது மனிதனின் கடமை.

உன் கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டி பிரார்த்தனை செய் கட்டாயம் உன் பிரார்த்தனைக்குக் கடவுள் செவி சாய்ப்பார். இறைவனின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு கடமையை மறந்து விடாதே. மாட்டுக்காரன் மேய்ச்சல் காட்டுக்கு ஓட்டித்தான் போவான். மேய வேண்டியது மாடுதானே. உன் கடமையையைச் செய் பலனுக்காக கையேந்தாதே அதுவே பெரிய வேள்வி ஆகும்.

புடலங்காயில் ஒரு சுமையைக் கட்டினால் வளையாது நீண்டு வளரும். மனிதனுக்கும் கடமை என்னும் சுமையைக் கட்டினால் வளையாது நேராக வாழ்வான். நீ எங்கு சென்றாலும் உன் கடமையைச் செய் உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்.

ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் இறைவன் உன்னுடன் இருக்கிறான் என்பதை உணர்ந்துகொள். நீ அவனுக்கு மிகவும் நெருக்கமானவன். கண் இமைகள் விழியைக் காப்பதுபோல இறைவன் உன்னைக் காப்பாற்றுவான். அவன் உன்னை விட்டு விலக மாட்டான். நீயும் அவனைவிட்டு விலகமுடியாது. இந்த நிமிடத்திலிருந்து எதையும் எதிர்பார்த்துச் செயல்படாதே. மாறாத அன்புடன் உன் கடமையைச் செய்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவலை நெருப்பைப் போன்றது

**-பிரம்மகுமாரி தாதி பிரகாஷ்மணி**

எந்த ஒரு விடயமாயினும் என்ன செய்வது? எப்படிச் செய்வது? என்று திட்டமிடுங்கள். பலருடன் கூடி ஆலோசனை செய்யுங்கள். மாறாக தனியாக இருந்து கவலைப் படாதீர்கள். கவலை நெருப்பைப் போன்றது.

நான் ஒருபோதும் கவலைப்பட்டதேயில்லை. யாமிருக்கப்பய மேன் என இறைவன் கூறுகின்றார். நமக்காக அவர் கவலைப் படட்டும்!

நான் இறைவனின் குழந்தை என்ற பூரண நம்பிக்கை கொண்ட ஒருவன் எதற்காகவும் தன் புத்தியை அலட்டிக் கொள்ளமாட்டான்.

இறைவனின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருங்கள். நேர்மையாய் முயற்சி செய்யுங்கள். அதைத் தொடர்ந்து கிடைப் பதை இறைவன் கொடுத்ததாக அனுபவியுங்கள். அப்போது எந்தப் பொருளுக்காகவும் கவலைப்படமாட்டீர்கள்.

அவர் எதை வழங்குகிறாரோ அதையே உண்கிறேன். எதை அணிவிக்கின்றாரரே அதையே அணிகிறேன். அவர் எனக்கு இவ்வளவு தான் கொடுக்க எண்ணியிருக்கிறார் போலும் என எண்ணி மகிழ்ச்சியடையுங்கள்.

அவர் நம்மை இராஜகுமாரன் போல வாழ வைக்க நினைத்திருந்தால் அதையும் ஏற்றுக்கொள்ளுங்கள். எதையுமே அதிர்ஷ்டமாக கருதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோல்வியைக் கண்டு கலங்காதீர்கள்

-யோகானந்தர்

மனிதன் அனுபவிக்கும் ஒவ்வொரு உணர்வும் அவனது மனதைப் பொறுத்துதான் அமைகிறது. பணம் நிறைந்த ஒருவனது மனம், தான் ஏழையாக இருப்பதாகவும் இப்போது இருப்பதில் திருப்தி இல்லை என்றும் எண்ணினால், இல்லாதவனைப் போலவே தான் தன்னை உணர்வான். ஆகவே, மனதை எப்போதும் திருப்தி உணர்வு கொண்டதாக வைத்திருங்கள்

ஒருவன் மற்றொருவனால் ஏமாற்றப்படும்போது மனது உடைகிறான். அப்போது ஆறுதல் சொல்ல யாரும் இல்லா விட்டால், தனக்கு உதவிக்கு யாரும் இல்லையே என்று எண்ணி வருந்துகிறான். இது சரியான எண்ணமல்ல. ஏனெனில் உலகில் ஆதரவற்றவர்கள் என்று யாருமே இல்லை. ஒவ்வொருவருக்கும் இறைவன் ஆதரவு தருபவனாகவே இருக்கிறான். உங்களை யார் கைவிட்டாலும் அவன் நிச்சயமாகக் கைவிடமாட்டான்.

மனிதர்கள் இறைவனின் வடிவங்களே. அவர்கள் யாராலும் வெற்றிகொள்ளமுடியாத அளவிற்கு திறமையுடையவர்களாக இருக்கின்றனர். எனவே பெரிய தோல்வி வந்தாற்கூட அதற்காக கலங்காதீர்கள் ஏனெனில் நீங்கள் வெற்றி பெற வேண்டுமென்பதில் உங்களைவிட இறைவன்தான் அதிக ஆர்வமுள்ளவனாக இருக்கிறான்.

பணம் இருந்தால் மகிழ்ச்சியுடன் இருக்கலாம் என்றும் எண்ணாதீர்கள். பணக்காரர்கள் வெளியில் மகிழ்ச்சியுடன் இருப்பதாகத் தோன்றினாலும், அவர்களுக்குள்ளும் பல துன்பங்கள் இருக்கத்தான் செய்யும். ஆகவே உங்களுக்கு நிகழ்பவற்றை இன்பமாகவே எடுத்துக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராமாயணம் சொல்லும் கதை

-கிருபானந்தவாரியார் சுவாமிகள்

இன்பம், துன்பம் ஆகியவற்றின் கலவையே வாழ்க்கை. இவ்விரண்டையும் சந்திக்காதவர்கள் யாருமில்லை. எனவே, இன்பம் வரும்போது மகிழ்ச்சியும் துன்பம் வரும்போது கவலையும் கொள்ளுதல் கூடாது. இவ்விரண்டையும் சரிசமமாகவே நினைத்து வாழ வேண்டும்.

தசரதர் தன் மனைவி கைகேயியிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக இராமபிரானை காட்டுக்குப் போகும்படி கூறினார். அதற்காக இராமபிரான் சற்றும் கவலைப்படவில்லை. தந்தையின் ஆணையை கடமையாகக் கருதி நிறைவேற்றினார். அவரே வனவாசம் முடிந்து திரும்பியபோது அயோத்தியின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். அதற்காக அவர் மகிழ்ச்சியும் அடையவில்லை.

வாழ்க்கையின் பல தத்துவங்களை எடுத்துச் சொல்லும் இராமயணாம், இன்ப, துன்பத்தின்போது ஒரே மனநிலையில் இருக்கவேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்துகிறது.

உங்களது வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள். அதைச் செய்வதில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருங்கள். அதைவிடுத்து, பிறரது வேலையில் தலையிடுவதும் அவர்களது செயலைத் திருத்திக் கொண்டிருப்பதும் கூடாது. இவ்வாறு செய்வது உங்களுக்குச் சரியாகவே தோன்றும். ஆனால், அதைக் கேட்பவரின் மனநிலையில் நிச்சயம் வித்தியாசம் இருக்கும். இதனைப்புரிந்து கொண்டு உங்களது வேலையை மட்டும் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்பதுன்பத்துக்குத் யார் காரணம்

-மாதா அமிர்தானந்தமயிதேவி

ஏட்டளவில் மட்டும் கற்கும் கல்வியால் ஒரு பயனும் இல்லை. இத்தகைய கல்வியால் அறிவு பெற்றவர்களை கற்றவர் என்றும் ஏற்றுக்கொள்ளமுடியாது. மனதைப் பண்படுத்தும் கலையை கற்றிருப்பவரே உண்மையான கல்வி கற்றவர் ஆவார். ஒருவன் மனதைக்கட்டுப்படுத்தாமல் எவ்வளவு கற்றிருந்தாலும் அதனால் அணுவளவு பயன்கூட உண்டாகாது

சிலர் தங்களுக்கு உண்டாகும் துன்பங்களுக்கு இறைவன் தான் காரணம் என்றும் துன்பம் உண்டானதற்கு தாம் எந்த வகையிலும் காரணம் கிடையாது என்றும் நினைக்கிறார்கள். இது தவறாகும்.

இறைவன் யாருக்கும் துன்பம் கொடுப்பதில்லை. அன்பு வடிவமான அவர் அனைத்து உயிர்களுக்கும் நலமாக இருக்கவே விரும்புகிறார். உண்மையில் ஒவ்வொருவருக்கும் உண்டாகும் இன்ப துன்பங்களுக்கு அவர்களே காரணமாக இருக்கின்றனர். தற்போது உண்டாகியிருக்கும் துன்பம் முன்பு ஏற்றுக்கொண்ட இன்பத்தின் தொடர்ச்சியாகத்தான் இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு இன்பத்துக்கு பின்பும் துன்பமும் இருக்கிறது.

சுயநலம் மிகவும் தீய குணம். சுயநலவாதிகள் தங்களது நன்மையை மட்டும் கருத்தில்கொண்டு செயல்படுபவர்களே தவிர அதனால் பிறருக்கு உண்டாகும் தீமையைப் பற்றி சிறிதும் சிந்திக்க மாட்டார்கள். ஆகவே சுயநலவாதிகளைக் கண்டால் விலகிச் சென்று விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனாக இருப்போம்

-திரு.வி.க

மனிதன் தன் சொந்த வாழ்வையே பெரிதும் கவனிக்கிறான். தனக்கு வேண்டுவனவற்றை தேட முயல்கிறான். தனக்கு வேண்டுமென்பது கிடைக்காதபோது பிறரை துன்புறுத்தி அவர்களது உடைமையைக் கவர்ந்து வாழ விரும்புகின்றான். இந்த இயல்புகள் தான் விலங்குகளிடமும் இருக்கின்றன.

மனிதன் தன்னிடமுள்ள விலங்குக் குணங்களை விடுத்து தெய்வீக இயல்புகளைப் பெறமுயல வேண்டும். தீய குணத்தை விடுத்தவர்களே உண்மையான மனிதர்கள் ஆவர்.

நம்மவர்கள் ஊனப்பட்ட அரசியலில் நுழைந்து, தெய்வீகத்தை மறந்து, விலங்கு இயல்புகளை எழுப்பக்கூடிய முறைகளை கடைப்பிடிக்கிறார்கள். இதனால் நன்மை எதுவும் உண்டாவதில்லை. இந்த உண்மையை உணர்ந்து கொண்டு மனித வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும்.

மனிதன் விலங்குக்கும் தெய்வத்துக்கும் இடையில் நிற்கிறான். இப்படி சாய்ந்தால் விலங்காகிறான். அப்படி சாய்ந்தால் தெய்வமாகின்றான். சாந்தம், பொறுமை, அன்பு ஆகியவை தெய்வநிலை. கோபம், பொறாமை வஞ்சனை ஆகியவை விலங்கு நிலை இதில் எதைத் தேர்ந்தெடுக்கிறானோ அப்படியே ஆகிறான்.

நீங்கள் தெய்வநிலையை அடைவதற்கே முயற்சி செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ ஞானி விமலா தக்கரின் ஆன்மிக உரைகள்



ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு கொழும்பிலுள்ள விமலாஜியின் நண்பர் வட்டத்தினால் அவரின் ஆன்மிக சொற்பொழிவொன்று வெள்ளவத்தை 3/2 இராமகிருஷ்ண டெரஸிலுள்ள இல்லத்தில் ஒலிபரப்பப்படுகின்றது. கூடியிருப்போரின் கருத்துப் பரிமாற்றல் ஒலி பரப்பின் முடிவில் இடம்பெறுகின்றது.

அன்னை விமலாஜி 1962 - 1991 ஆம் ஆண்டு வரை உலகம் முழுவதும் சென்று ஆன்மவிசார உரைகள், கலந்துரை யாடல்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

சமயம் என்றால் என்ன?
உடல் மன சுதந்திரம் என்றால் என்ன?

சமுதாயத்தில் உள மன அமைதியை இழக்காமல் வாழ் வதின் அவசியம். இப்படி தனது வாழ்வில் தான் அனுபவ மூலம் கண்டறிந்த உண்மைகளை மிக எளிமையான நடையில் மிகத் தெளிவாகவும் சகல நாட்டு மக்களுடனும் பகிர்ந்து கொண்டார்.

ஒரு விடயத்தில் மட்டும் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். தனது பெயரில் அன்னை விமலாஜி ஒருவித ஆன்மீக சபைகளையோ, நிறுவனங்களையோ நிறுவியதும் இல்லை. தன்னைச்சுற்றி ஒரு குரு-சிஷ்ய திருக் கூட்டத்தை வளர்க்கவும் இல்லை. அவர் பிறந்த நாடான இந்தியா உட்பட உலகெங்கும் அவர் பெயரில் இன்று வரை ஒரு சபையோ ஆன்மிக கட்டமைப் புக்களோ கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது ஆன்ம ஈடேற்றத்திற்கான குருவும் சிஷ்யனும் உனக்குள்ளேயே இருக்கின்றனர்.

அக முகமாகு. ஆழ்ந்த சிந்தனை செய்து பார்

என்று ஆன்ம விசாரத்தில் ஈடுபடும் சாதகர்கள் உண்மையைக் தாங்களாகவே உணரவேண்டும். உணர முடியும். என்று ஆணித்தரமாகக் கூறி அதற்கான ஆன்மீக சாதனைகளை பற்றி மிகவும் எளிமையான முறையில் கூறி ஊக்குவித்தார். இப்படி செயலாற்றல் மிக்க ஆன்மீக விசார தத்துவ ஞானியாக விளங்கினார். விமலாஜி.

அமைதியே எங்கள் எல்லோரதும் இயல்பு நிலை.

வெளியுலகத் தாக்கங்களே எங்களில் அந்த அமைதி நிலையைக் குலைக்கின்றன. இத்தாக்கங்களில் மனம் தளும்பாது, உணர்ச்சி வலைக்குள் சிக்காது, தெளிந்த விவேகத்துடன் கருணையுடன் அவற்றை எதிர்கொள்ளும் அரிய கலையை விமலாஜி ஆன்மிக சாதகர்களுக்குப் புகட்டியுள்ளார்.

நன்றி வீரகேசரி
27.03.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு...

வியத்தலும் இலமே நூலில் உள்ளடங்கியுள்ள சான்றோர் சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு 500 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.

எமக்கு கிடைக்கும் கட்டுரைகளில் சிறந்தனவாகத் தெரிவு செய்யப்படும். மூன்று கட்டுரைகளுக்கு

**1ம் பரிசு 1000 ரூபா**
**2ம் பரிசு 750 ரூபா**
**3ம் பரிசு 500 ரூபா**

## வழங்கப்படும்

**தங்கள் கட்டுரைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி**

**15.12.2010**

* கட்டுரைகளை அனுப்பும் மாணவர்கள் தம்மைப்பற்றிய விபரங்களைத் தனித்தாளில் எழுதி, கட்டுரையுடன் இணைத்து பதிவுத் தாபாலில் அனுப்புதல் வேண்டும்.

* சிறந்த கட்டுரைகளை எழுதியவர்களுக்கான பரிசுகள் 2010 தைப்பொங்கல் தினத்தில் வழங்கப்படும்.

* கட்டுரைகளை எழுதும் மாணவர்கள் தமது சொந்த கையெழுத்தில் எழுதுதல் வேண்டும். மதிப்பீட்டின்போது எழுத்துறுப்பு கவனிக்கப்படும்.


* அனுப்ப வேண்டிய முகவரி

**மேகலா நிலையம்**
**52/5, காளி கோவில் வீதி**
**கூமாங்குளம், வவுனியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amazed not by the Great



" And in the end, it's not the Years in Your Life That Count. it's the life in your Years".

ISBN 978 - 955-98302-4-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org